**தமிழகத்திற்கு ஜி.எஸ்.டி. இழப்பீடான ரூ.11 ஆயிரத்து 185 கோடியை உடனே வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வலியுறுத்தி உள்ளார்.**

டெல்லியில் மத்திய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் 2023–24ம் ஆண்டின் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கைக்கான (பட்ஜெட்) முந்தைய ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் பேசியதாவது:

செஸ் வரி மற்றும் மிகுவரி (செஸ், சர்சார்ஜ்) போன்ற வரிகளை மத்திய அரசு தொடர்ந்து அதிகரித்து வருவது, நிதிக் கூட்டாட்சி முறைக்கு முரணாக உள்ளது. வரிப் பகிர்வில் இவை மாநிலங்களுக்கு பயனளிக்காததால், மாநில அரசுகளின் நிதி ஆதாரம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது.

இந்த வரி விதிப்பு கடந்த 10 ஆண்டுகளில் 10.4 சதவீதத்தில் இருந்து 26.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. மத்திய அரசு வசூலிக்கும் இந்த வரிகளில் மாநில அரசு தனது பங்கை பெற முடியவில்லை. எனவே இந்த 2 வரிகளையும் அடிப்படை வரி மதிப்புடன் இணைக்க வேண்டும். இதன் மூலம் மாநிலங்கள் தங்களின் சட்ட ரீதியான பங்கைப் பெற முடியும்.

மத்திய அரசு அறிமுகம் செய்த ஜி.எஸ்.டி. வரியில் மாநில அரசு இணைந்தது. ஆனால் ஜி.எஸ்.டி. வரி அமலுக்கு வந்த பிறகு, மாநில அரசுக்கு சட்டத்தின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட வருவாய்க்கும், உண்மையான வருவாய்க்கும் அதிக இடைவெளி உள்ளது. கொரோனா பரவலும் சேர்ந்து கொண்டு பிரச்சினைகளை மேலும் பெரிதாக்கிவிட்டது. இன்னும் அதிலிருந்து முழுமையாக மாநில அரசு எழவில்லை. எதிர்பார்க்கப்பட்ட வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டு இருப்பதால் அதை கருத்தில் கொண்டு, நிலுவையில் உள்ள இழப்பீடான ரூ.11 ஆயிரத்து 185.82 கோடியை விரைவாக அளிக்க வேண்டும்.

### 5 திட்டங்களுக்கு ரூ.2,200 கோடி

தமிழகத்தின் குறிப்பிட்ட 5 திட்டங்களுக்கு ரூ.2,200 கோடியை அளிக்கும்படி 15வது நிதி கமிஷன் பரிந்துரைத்துள்ளது. அந்த தொகையை எந்தவித நிபந்தனைகளையும் விதிக்காமல் வழங்க வேண்டும்.

சென்னையில் வெள்ள பேரிடரை எதிர்கொள்வதற்காக 2021–22 முதல் 2025–26ம் ஆண்டு வரை ரூ.500 கோடியை வழங்கும்படி 15வது நிதி கமிஷன் தனது இறுதி அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது. ஆனால் 2 ஆண்டுகள் ஆகியும் இந்த நிதியை வழங்குவதற்கான விதிகளை தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் இன்னும் வகுக்கப்படவில்லை. கடந்த 2 ஆண்டுகளாக சென்னை வெள்ளத்தை எதிர்கொண்டு வருகிறது. இதற்கு மாநில அரசு தனது சொந்த ஆதாரத்தில் இருந்து செலவிட்டு வருகிறது. எனவே இந்த தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

### புதிய ரெயில் பாதை

தொழில் பகுதிகளுக்கு புதிய ரெயில் பாதைகள் அமைத்துத்தரப்பட வேண்டும். இதன் மூலம் மாநில பொருளாதாரம் உயரும்.

அந்த வகையில் தாம்பரம்–செங்கல்பட்டு இடையே 4வது பாதை, அத்திப்பட்டு – கும்மிடிப்பூண்டி இடையே 3 மற்றும் 4வது ரெயில் பாதை, திருப்பத்தூர் – கிருஷ்ணகிரி–ஓசூர் இடையே புதிய ரெயில் பாதை, அரக்கோணம் – காஞ்சீபுரம்–செங்கல்பட்டு இடையே இரட்டை ரெயில் பாதை, சென்னை – மதுரை மற்றும் சென்னை – கோவை இடையே வந்தே பாரத் ரெயில் ஆகிய வசதிகளை செய்து தர வேண்டும். மதுரையில் எய்ம்ஸ் ஆஸ்பத்திரி விரைவாக அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# கிருஷ்ணகிரி நிறுவனத்தில் 80% பணியிடங்களில் தமிழர்களை நியமிக்க டாடா நிறுவனம் உறுதி: அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்

சென்னை, நவ.26–

**கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள டாடா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் 80 சதவீத பணியிடங்களுக்கு தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை நியமிக்க அந்த நிறுவனம் உறுதி அளித்துள்ளது என்று அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.**

தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

டாடா எலெக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், மின்னணு பொருட்களை உற்பத்தி செய்வதற்காக தனது தொழிற்சாலையை கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை ஜி.எம்.ஆர். தொழிற்பூங்காவில், சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைத்து வருகிறது. 4,684 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு வரும் இத்தொழிற்சாலையின் மூலம் ஏறத்தாழ 18 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தொழிற்சாலையில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருவதாக பத்திரிகை செய்திகளும், புகார்களும் அரசிற்கு வந்துகொண்டிருக்கின்றன. இந்நிறுவனம் தற்போது வரை தமிழ்நாட்டைச் சார்ந்த ஏறத்தாழ 5,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளதாக தெரிவித்துள்ளது. வணிக ரீதியிலான உற்பத்தியினைத் தொடங்கும் போது பணியாளர் தேவையில் ஏறத்தாழ 80 சதவீத பணியிடங்களுக்கு தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை நியமிக்க டாடா எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் பொறுப்புறுதி அளித்துள்ளது.

பணி நியமனத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்த பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (மற்றும்) வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஆகியோர் இந்நிறுவனத்துடன் கலந்தாலோசனை மேற்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து, இந்நிறுவனம் சார்பாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் வாயிலாக நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், விழுப்புரம், திருப்பத்தூர், சேலம், பெரம்பலூர், திருவண்ணாமலை, ராமநாதபுரம், மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, ஈரோடு, சிவகங்கை, வேலூர், மதுரை, நெல்லை, தேனி, காஞ்சீபுரம், திண்டுக்கல், தூத்துக்குடி, செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, விருதுநகர், தஞ்சாவூர், தென்காசி, நாகப்பட்டினம், நாகர்கோவில், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

மேற்காணும் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களில் 7,559 நபர்கள் கலந்து கொண்டனர். அவர்களில், 1,993 நபர்களுக்கு தற்போது வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்நிறுவனம் அமைந்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 3 நாட்கள் நடந்த வேலைவாய்ப்பு முகாம்களில் 895 நபர்கள் கலந்து கொண்டதில், 355 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டைச் சார்ந்த நபர்களுக்கு நிறுவனத்தால் வேலைவாய்ப்பு வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் அமைந்துள்ள பிற தொழில் நிறுவனங்களும் தமிழ்நாட்டைச் சார்ந்த நபர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குவதை இந்த அரசு உறுதி செய்யும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.


**PUBLIC NOTICE**

Notice is hereby given that the following Authorised Person is/are no longer affiliated as Authorised Person (AP) of **M/s. Motilal Oswal Financial Services Limited, Member of MCX, Member ID - 55930** having the registered office as given below with effect from **24-August-2022.** Any person dealing with below mentioned Authorised Person should do so at his or her own risk. **M/s. (Motilal Oswal Financial Services Limited),** shall not be liable for any dealing with them.

| | |
|---|---|
| Name of the Authorised Person | K MANJULA |
| Trade name of the Authorised Person | K MANJULA |
| Authorised Person Code | MCX/AP/118542 |
| Date of Approval | 26-Jul-2018 |
| Address of AP | ARVIND TOWERS, NO. 603, A G -11, GROUND FLOOR, CENTRAL AVENUE, KORATTUR, CHENNAI - 600080, TAMIL NADU |
| Reasons | Non-adherence to Compliance |

In case of any queries, investors are requested to inform **(Motilal Oswal Financial Services Limited)** at the following address within 15 days from the date of issuing this notice:

**Motilal Oswal Tower, Rahimtullah Sayani Road, Opposite Parel ST Depot, Prabhadevi, Mumbai - 400 025.**

Sd/-
Motilal Oswal Financial Services Limited

ஆன்லைன் இ–ஏலம் சொத்து விற்பனை

**kotak கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: எண். 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை–600 006.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி பைனான்சியல் கன்ஸ்யூமர் பைனான்ஸ் இந்தியா லிமிடெட் (இனி CCFL என்று குறிப்பிடப்படும்) மூலம் கடன் வழங்கப்பட்டதை தொடர்ந்து செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் 20.07.2022 அன்று கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. திரு. வி. பிரகாஷ் மற்றும் திருமதி. சித்ரா பிரகாஷ் ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண் 15904899 & 15904872 ன் கீழ் 21.11.2022 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.1,32,20,395/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்திரண்டு லட்சத்து இருபதாயிரத்து முன்னூற்று தொன்னூற்று ஐந்து மட்டும்) மற்றும் 22.11.2022 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ‘‘எங்கு எப்படி உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் 19.12.2022 பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.86,00,000/– (ரூபாய் எண்பத்தாறு லட்சம்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.8,60,000/– (ரூபாய் எட்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 16.12.2022 அன்று 5.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்தின் விவரம்: தபால் முகவரி: மனை எண். பி–127, பழைய எண்–29, புதிய எண்–84, 3வது மாடி, ராஜம் அடுக்குமாடி குடியிருப்புகள், 1வது அவென்யூ, அசோக் நகர், சென்னை–600 083. மேலும் குறிப்பாக இங்கே விவரிக்கப்பட்டுள்ளது: மனை எண். பி–127ல் உள்ள நிலம், கட்டிடம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். மூன்றாவது மாடி, ராஜம் அடுக்குமாடி குடியிருப்புகள் 1370 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது. மற்றும் 5000 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 657 சதுர அடி, பழைய எண்.29, புதிய எண்.84, 100' சாலை, முதல் அவென்யூ, அசோக் நகர், சென்னை–600 083, சர்வே எண். 284 மற்றும் 217 கோடம்பாக்கம் கிராமத்தின் பகுதி, பிளாக் எண். 70, டி.எஸ்.எண்.8, அளவீடு 2 கிரவுண்ட் மற்றும் 200 சதுர அடி அதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு : மனை எண். பி–126; தெற்கு : மனை எண். பி–128; கிழக்கு :C –553 & C–554; மேற்கு: 100 அடி. சாலை;

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை செய்யப்பட உள்ள ஈடுபெற்ற சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. விஜய் குமார் மேனன் (+91 9940572248), திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9884718338), திரு. சூரிய பெரியசாமி (+91 9600222111) & திரு. ராஜேந்திர தஹியா (+91 8448264515) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html and/or on https://bankauctions.inல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை
தேதி : 26–11–2022

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டுக்காக

**டெலிசிஸ் இன்போ–இன்ப்ரா (I) லிமிடெட்**
(CIN: L70200TN1992PLC023621)

பதிவு அலுவலகம்: எண் 1/எல் பிளாக்கர்ஸ் சாலை, 2எப் செட்டி பேலஸ் 2வது தளம் சிந்தாதிரிப்பேட்டை சென்னை தமிழ்நாடு, 600002. மின்னஞ்சல்:telesys1992@yahoo.com, இணையதளம்:www.telesysinfo.in; தொலைபேசி: 044 49510300

**காணொலி காட்சி/பிற ஒளி ஒலி சாதனங்கள் மூலம் நடத்தப்படும் அசாதாரண பொதுக் கூட்டம் குறித்த அறிவிப்பு**

அசாதாரண பொதுக்கூட்ட அறிவிப்பில் (‘அறிவிப்பு’) குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களை பரிவர்த்தனை செய்ய நிறுவனத்தின் அசாதாரண பொதுக் கூட்டம் ("EGM") புதன்கிழமை, 21 டிசம்பர், 2022 அன்று மதியம் 2.00 மணிக்கு (இந்திய நேரப்படி) காணொலி காட்சி/பிற ஒளி ஒலி சாதனங்கள் மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட ('எம்சிஏ சுற்றறிக்கைகள்') ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட எண்.17/2020, ஜூன் 15, 2020 தேதியிட்ட எண்.22/2020, செப்டம்பர் 28, 2020 தேதியிட்ட எண்.33/2020, டிசம்பர் 31, 2020 தேதியிட்ட எண்.39/2020, ஜூன் 23, 2021 தேதியிட்ட எண்.10/2021, டிசம்பர் 08, 2021 தேதியிட்ட எண்.20/2021 மற்றும் மே 5, 2022 தேதியிட்ட எண்.3/2022 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள், 2015 (‘‘பட்டியல் கட்டுப்பாடுகள்’’) மற்றும் செபியின் மே 12, 2020 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD1/ CIR/P/2020/79, ஜனவரி 15, 021 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 மற்றும் மே 13, 2022 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CMD2/CIR/P/2022/62 ஆகியவற்றுக்கு இணங்க உறுப்பினர்கள் நேரடியாக ஒரு பொது இடத்தில் கூடாமல் அசாதாரண பொதுக் கூட்டம் கூட்டப்பட உள்ளது.

எம்சிஏ சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனம்/டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் (DPs) மின்னஞ்சல் முகவரி பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் மட்டுமே அறிவிப்பு அனுப்பப்படும். www.telesys.in என்ற நிறுவனத்தின் இணையதளத்திலும், பங்குச் சந்தைகளின் இணையதளங்களிலும், அதாவது BSE லிமிடெட்டின் www.bseindia.com என்ற இணையதளத்திலும் இந்த அறிவிப்பு கிடைக்கும். அசாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான வழிமுறைகள் மற்றும் பங்கேற்பதற்கான வழிமுறைகள் அறிவிப்பில் வழங்கப்படும். VC/OAVM மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 103–ன் கீழ் குறைந்தபட்சத்தை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் நிறுவனத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை இதுவரை பதிவு செய்யாத / புதுப்பிக்காத உறுப்பினர்கள், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்தில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்ய / புதுப்பிக்க, cameosys@cameoindia.com/murali@cameoindia.com–ல் போலியோ எண்ணின் விவரங்களுடன் பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட நகல் மற்றும் உறுப்பினர்களின் முகவரிக்கு ஆதரவாக வேறு ஏதேனும் ஆவணத்தின் (எ.கா. ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், ஆதார் அட்டை போன்றவை) சுய சான்றளிக்கப்பட்ட நகலை இணைத்து அனுப்பி அல்லது www.cameoindia.com என்ற இணையதளத்தில் லாகின் செய்து பதிவு செய்து கொள்ளலாம்.

மின்னணு முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், தங்களின் மின்னஞ்சல் முகவரியை அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் பதிவு செய்ய / புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானங்களின் மீது வாக்களிக்க அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்கும். கூடுதலாக, அசாதாரண பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்கும். அசாதாரண பொதுக் கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிப்பதற்கான விரிவான செயல்முறை அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

எம்சிஏ சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களின் தகவல் மற்றும் நன்மைக்காக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

டெலிசிஸ் இன்போ – இன்ப்ரா (I) லிமிடெட்டிற்காக
(முன்பு டெலிசிஸ் சாப்ட்வேர் லிமிடெட்)
ஒப்பம்/– ராஜேந்திரன் ஜெயராம்
முழு நேர இயக்குனர்
(DIN: 01784664)

இடம் : சென்னை
தேதி: நவம்பர் 25, 2022

**அசல் நிலம்/சொத்து ஆவணம் காணவில்லை**

சென்னை–600 042, வேளச்சேரி, வண்டிக்காரன் தெரு, C2, சி.டி.எஸ். அவென்யு, எண்.10, என்ற முகவரியில் வசித்து வரும் லேட். G.சுப்பிரமணியன் அவர்களின் குமாரர் சுமார் 74 வயதுள்ள நான் S.ருத்திராபதி, ஆதார் எண் 8426 5890 3911. இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில், ஆலந்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்ட எனது தாயார் திருமதி.S.சீத்தாலட்சுமி அவர்களுக்கு சொந்தமான அசையா சொத்தின் கிரய ஆவணம் எண்.2982/1995, தேதி 11/10/1995 மற்றும் பதிவு செய்யப்படாத 01/09/1995–ம் தேதியிட்ட கட்டுமான உடன்படிக்கை பத்திரம் என் வீட்டில் என் வசம் இருந்தது. மேற்படி எனது வீட்டினை கடந்த 12/03/2022–ம் தேதியன்று நாங்கள் சுண்ணாம்பு மற்றும் பெயிண்ட் வர்ணம் அடிக்கும் சமயம் வீட்டில் உள்ள பழைய பேப்பர் மற்றும் குப்பையில் போடுவதற்காக வைத்திருந்த பேப்பரில் கலந்து மேற்படி 2 பத்திரங்களும் 15/03/2022ம் அன்று தொலைந்துபோய் விட்டது. நானும் என் வீட்டிலும் மற்றும் பல இடங்களில் எங்கு தேடியும் மேற்படி பத்திரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே மேற்படி பத்திரங்களை யாரேனும் கண்டெடுத்தால், எனது கைப்பேசி 94444 63048, எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்புகொண்டு திரும்ப தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

S.ருத்திராபதி
எண்.10, C2, சி.டி.எஸ். அவென்யு, வண்டிக்காரன் தெரு, வேளச்சேரி, சென்னை600 042. கைப்பேசி94444 63048.

**பெயர் மாற்றம்**

நான் கோமதி மணிகண்டன் க/பெ மணிகண்டன் பிறந்த தேதி 07.05.1983 வசிப்பிடம் 37 சுப மங்களா நகர் விரிவு-2 பொன்மார் சென்னை - 600127 என் பெயர் கோமதி சந்திரன் அப்பா பெயரில் இருந்து என் கணவர் பெயருடன் சேர்த்து **கோமதி மணிகண்டன்** என்று பதியப்பட்டுள்ளது.

**IN THE XVIII Assistant Judge CITY CIVIL COURT AT CHENNAI O.S. No.4964 of 2020**

Ms. Deepa Rachael Peppin, Represented through her Power of Attorney Mrs. VinooPeppin, Flat G2, Door No.3-B, New No.5, B.K.N Avenue, Vepery,Chennai 600 007 ... Petitioner

-Vs-

1. Mrs. Asha Devi, No. 2, Anjugam Nagar, Thiruvottiyur, Chennai 600 019
2. Mr. Prabhakar Jacob, No.72/ New No.10, Central Street, Kilpauk Garden Colony, Chennai 600 010

...Defendants

NOTICE

Please take notice that my client Ms. Deepa Rachael Peppin, Represented through her Power of Attorney Mrs. Vinoo Peppin. Flat G2, Door No.3-B, New No.5, B.K.N Avenue, Vepery, Chennai 600 007 has instituted a suit for Permanent injunction against Mrs. Asha Devi, No. 2, Anjugam Nagar, Thiruvottiyur, Chennai 600 019 and Mr. Prabhakar Jacob, No.72/New No.10, Central Street, Kilpauk Garden Colony, Chennai 600 010 before Hon'ble XVIII Assistant Judge, City Civil Court, Chennai for the reliefsof permanent Injunction and others.
2. Please also take notice that the Hon'ble Court has ordered to effect paper publication in Tamil Daily by 19.12.2022 in the main suit.
2) Kindly appear either in person or through your counsel on 19.12.2022 at 10 am before the Hon'ble XVIII Assistant Judge, City Civil Court, Chennai without fail, failing which the matter will be decided Ex-party in your absence.

D. DANIEL
Advocate for the Plaintiff

**NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES**

Notice is hereby given that the below mentioned Share Certificate(s) issued by M/s. ASHOK LEYLAND LIMITED, in our name has been lost/misplaced.

| Folio no | Certificate No. | Distinctive No | No. of Shares |
|---|---|---|---|
| 3371 | 3371 | 446623331 – 446625160 | 1830 |
| | 35188 | 2646111870 - 2646113699 | 1830 |

Due notice thereof has been given to the Company and We have applied to the Company for issue of Duplicate Share Certificate.

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificate. Any Person who has any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with M/s. Ashok Leyland Limited, **No. 1, Sardar Patel Road, Guindy, Chennai – 600 032, Email: secretarial@ashokleyland.com** or to its Share Transfer Agents, Integrated Registry Management Services Private Limited, “Kences Towers”, 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600 017, Email: csdstd@integratedindia.in, within 15 days of publication of this notice, else the Company will proceed to issue duplicate certificate(s), without further intimation.

Place : CHENNAI
Date : 25/11/2022

VINAY JITENDRA MASHRUWALA
MRS. SUSHILA JITENDRA MASHRUWALA
FLAT NO.2, 1ST FLOOR,PLOT NO.755/3,
BLUE GARDENIA,
DR GOPALARAO DESHMUKJ MARG,
CUMBALLA HILL, MUMBAI - 400 026.

**பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**

கார்ப்பரேட் அலுவலகம்: செரிப்ரம் ஐடி பார்க், பி2 கட்டிடம், 5வது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா 411014
கிளை அலுவலகம்: யூனிட் எண் – 804, 805, 806, 5வது தளம், டெல்டா விங், ரகேஜா டவர்ஸ், 177, அண்ணா சாலை, சென்னை – 600 002.

**சுவாதீன அறிவிப்பு**

**2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(4), 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 8(1)வது விதிமுறை கீழ். (பிற்சேர்க்கை IV)**

கீழே கையொப்பமிட்டுள்ள மெசர்ஸ் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (பிஎச்எப்எல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் மெசர்ஸ் பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் சார்பாக, கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8–(1)வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்(கள்)/உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர் (கள்) பெயர் (LAN எண், கிளை பெயர்) | ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம் (அசையா சொத்து) | டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை | சுவாதீன தேதி |
|---|---|---|---|
| கிளை : சென்னை (LAN No. 403HBT77503902 and 403HTP77504345) 1. ஜி. விஜயகுமார் (கடன்தாரர்) முகவரி : சி 19–003, புராவிடன்ட் காஸ்மோசிட்டி, டாக்டர் அப்துல் கலாம் சாலை, புதுப்பாக்கம், காஞ்சிபுரம் – 603 103 | விவசாய நிலம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்: புராவிடன்ட் காஸ்மோ சிட்டி, அபார்ட்மெண்ட் எண்.03 கீழ் தளம், பிளாக் 19, சி-செக்டார், பில்டப் ஏரியா 983 சதுர அடி கொண்ட 3 படுக்கை அறை கொண்ட பிளாட் மற்றும் அதன் சர்வே எண்கள். 55,56/1,57/2,57/4, விஸ்தீரணம் 23.50 ஏக்கரில் பிரிவுபடாத பங்கு நிலம் 532.87 சதுர அடியை உள்ளடக்கி உள்ளது. (பி) சர்வே எண்.53/3 விஸ்தீரணம் 1.04 ஏக்கர் (சி) சர்வே எண்.53/4, விஸ்தீரணம் 3.18 ஏக்கர், (டி) சர்வே எண்.53/10பி, விஸ்தீரணம் 0.09 ஏக்கர், இந்த சொத்தானது புதுப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, கிழக்கு : சாலை (சாலை அகலத்திற்காக விற்பனையாளர் பரிசாக கொடுத்தது), மேற்கு : டாக்டர் அப்துல் கலாம் சாலை மற்றும் பகுதி நிலம், வடக்கு : சாலை (சாலை அகலத்திற்காக விற்பனையாளர் பரிசாக கொடுத்தது), தெற்கு : சர்வே எண்கள். 53/10A, 53/6,52 மற்றும் 44–ல் உள்ள பகுதி நிலம். | 30 ஆகஸ்ட், 2022 ரூ.34,16,713/– (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து பதினாறாயிரத்து எழுநூற்று பதிமூன்று மட்டும்) | 22.11.2022 |
| கிளை : சென்னை (LAN No. 403HSL64337208 and 403TSH64337212) 1. கங்கா வி (கடன்தாரர்) 2. கார்த்திகேயன் கே (உடன் கடன்தாரர்) முகவரி : ஏ3–102, ஸ்ரீராம் சங்கரி அபார்ட்மெண்ட்ஸ், தனகப்புரம் பெருமாட்டுநல்லூர், காஞ்சிபுரம்603202 | விவசாய நிலம் அல்லாத சொத்து மற்றும் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்: சொத்து யூனிட் எண்.2, பிளாக் டி3, (ஏ3–102), முதல் தளம், விஸ்தீரணம் 1281 சதுர அடி, கார் பார்க்கிங் உள்ளடக்கி உள்ளது. பிளாட் பெயர் ‘‘ஸ்ரீராம் சங்கரி’’, மொத்தம் 36.09 ஏக்கரில் பிரிவுபடாத பங்கு நிலம் 773 சதுர அடி. இந்த சொத்தானது பெருமாட்டுநல்லூர் கிராமம், செங்கல்பட்டு 603 202ல் உள்ளது. கிழக்கு : பஞ்சாயத்து சாலை, மேற்கு : அங்கீகரிக்கப்பட்ட லே அவுட் ராஜாஜி நகர், வடக்கு: அங்கீகரிக்கப்பட்ட லே அவுட், தெற்கு: ஏரி, சர்வே எண்.96 | 30 ஆகஸ்ட், 2022 ரூ. 42,72,466/– (ரூபாய் நாற்பத்தி இரண்டு லட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து நானூற்று அறுபத்தாறு மட்டும்) | 22.11.2022 |

தேதி: 26.11.2022 இடம்: சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்